12th March 1964]

and Cheranmahadevi. As the working of the Centres was found uneconomic, all the Centres were closed during 1957–58. Each centre engaged about 50 to 60 women from the lower income group to make applams out of the raw materials supplied by the Centre and the average production ranged from 2,000 to 2,500 packets of 100 a day per centre. Marketing became an acute problem and it was the main factor for their closure. There are no Government applam production units functioning at present.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், கும்பகோணத்திலே அப்பளம் உற்பத்தி செய்வதில் அதிகமான ஜனங்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே அப்பளம் தயார் செய்ய ஒரு அப்பளத் தொழிற் சாலையை ஏற்படுத்த அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்பளம் தயாரிப்பதில் கஷ்டம் இல்லை. விற்பனை செய்வதில்தான் கஷ்டம் இருக்கிறது. சாதாரணமாக அப்பளம் உற்பத்தி செய்கிறவர்கள், விற்பனை செய்யவும் முயற்சி எடுத்துக்கொண்டால், இந்த ஐந்து ஸெண்டர்களும்கூட வெற்றிகரமாக நடந்திருக்கும். ஆனால் அவர்கள் உற்பத்திதான் செய்வோம் என்று சென்று கொண்டிருந்ததால் விற்பனை செய்ய முடியவில்லை, ஆகவே இந்த ஸெண்டர்களை மூட வேண்டிய அவசியம் வந்தது.

இன்சுலேட்டர்கள் உற்பத்தித் தொழிற்சாலை

* 231 **கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னைக்கு அருகே மின்சார இன்சுலேட்டர்கள் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்படும் உத்தேசமுண்டா ?

(இ) மேற்படி தொழிற்சாலைக்கு நெய்வேலியில் கிடைக்கும் களிமண் பயன்படுத்தப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) சென்னைக்கு அண்மையில் இன்சுலேட்டர் தயாரிக்கும் தொழிற்சாலையை பொதுத் துறையில் நிறுவ அரசாங்கத்துக்கு உத்தேசம் இல்லை. ஆனால் ஒரு தனியார் கம்பெனிக்கு இத்தகைய ஆலை நிறுவ அனுமதி தரப் பட்டுள்ளது.

(இ) இன்சுலேட்டர் தயாரிக்க இரண்டு மூன்று வகைக் களிமண்களின் கலவை தேவைப்படும். நெய்வேலிக் களிமண்ணும் கலவையில் சேர்க்கப்படும் என்று தெரிகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், இன்சுலேட்டர் செய்ய களிமண் தேவை என்றார்கள். 'ஒயிட் க்ளே' யினால் இன்சுலேட்டர் செய்ய முடியுமா என்று ஏதாவது ஆராய்ச்சி செய்திருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இண்டஸ்ட்ரியல் அட்வைசர் என்று வைத்திருக்கிறோம். அவரைக் கேட்டால் சொல்லுவார்.